**ADM COURT, SANKARANKOVIL**

தேதி 24.07.2025

CC. 12/2024

**அ.சா. 1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக நான் புகார் மனு ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. நான் சம்பவம் தொடர்பாக புகார் மனு அளிக்காததற்கு காரணம் என்னவென்றால் விபத்தில் இறந்துபோனவரின் உறவினர் வந்ததால் நான் புகார் மனு ஏதும் அளிக்கவில்லை. இவ்வழக்கின் புகார்தாரர் சம்பவம் நடந்து முடிந்தபிறகு சம்பவ இடத்திற்கு வந்து அதன்பிறகு புகார் அளித்தாரா என்றால் புகார்தாரர் சம்பவஇடத்திற்கு வரும் சமயத்தில் இறந்துபோன துரைச்சாமிக்கு உயிர் இருந்தது. அதன்பிறகு புகார்தாரர் போலீசில் புகார் அளித்தார். இறந்துபோன துரைச்சாமி சம்பவ இடத்தில் வைத்து இறந்தாரா அல்லது மருத்துவமனையில் வைத்து இறந்தாரா என்றால் சம்பவ இடத்தில் வைத்து இறந்துபோனார். விபத்து குறித்து நான் யாருக்காவது தகவல் கூறினேனா என்றால் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும்இடம் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய எல்கைக்குட்பட்டது அல்ல என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகில் எனது வீடு இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன துரைச்சாமி மதுபோதையில் வண்டியை வேகமாக ஓட்டி பாலத்திலிருந்து கீழே விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துபோனார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன துரைச்சாமி எனது உறவினர் என்பதால் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அளித்த சாட்சியமும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் எனது கு.வி.மு.ச பிரிவு 161 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம்

ஆகியவையும் முரணாக உள்ளன என்றால் சரியல்ல. இறந்துபோன துரைச்சாமியை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. துரைச்சாமியை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபிறகு வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இறந்துபோன துரைச்சாமிக்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**DM COURT, SANKARANKOVIL**</u>

**தேதி 24.07.2025**

**CC. 12/2024**

<u>**அ.சா. 2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். மேற்படி மருத்துவமனையில் விசாரித்தது தவிர்த்து வேறு எங்கும் வைத்து அதற்கு முன்போ அல்லது பிறகோ என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றிய தகவல் கிடைத்தவுடன் நான் யாருடன் எங்கு சென்றேன் என்றால் நான், எனது மனைவி மற்றும் எனது மகன் பாலமுருகன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மதியம் 1.40 மணிக்கு சென்றோம். நாங்கள் மேற்கூறியவாறு சம்பவ இடம் சென்றபோது எனது சகோதரர் ரத்தினசாமி சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. விபத்து தொடர்பாக ரத்தினசாமி என்பவர்தான் புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் மேற்கூறியவாறு சம்பவ இடம் சென்றபோது அங்கு யாரும் இல்லாததால் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்று பார்த்தபோது விபத்து நடந்ததற்கான தடயம் ஏதும்இருந்ததா என்றால் இறந்துபோன துரைச்சாமி ஓட்டிவந்த எனது இருசக்கரவாகனம் மற்றும் ரத்தம் சம்பவ இடத்தில் இருந்தது. இறந்துபோன துரைச்சாமிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. இறந்துபோன எனது மகன் துரைச்சாமிக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் துரைச்சாமி அவரது வாகனத்தை வேகமாக ஓட்டி சென்றதால் பாலத்திலிருந்து கீழே விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. இறந்துபோன எனது மகன் துரைச்சாமியை பார்ப்பதற்கு என்னுடன் எந்த நபர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் நான் எனது மனைவி மற்றும் எனது

மகன் பாலமுருகன் ஆகியோரக்ள் மருத்துவமனைக்கு சென்றோம். நான் கூறிய நாள் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது மகன் துரைச்சாமி அவரது வாகனத்தை வேகமாக ஒட்டி சென்றதால் பாலத்திலிருந்து கீழே விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டார் என்றாலும், விபத்து இழப்பீடு பெறும் நோக்கத்தோடு இவ்வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி விபத்திற்கான இழப்பீடு தொகையை நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். நான் அளித்த சாட்சியமும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களும் போலிசாரிடம் நான் அளித்த வாக்குமூலமும் முரணாக உள்ளன என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இவ்வழக்கில் நான் எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.